# சிலுவையின் பாதையில்



"என்னைப் பின்செல்ல விரும்புகிறவன்,
தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச்
சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்."

(மத்.16:24)


**INDIAN COMMITTEE ST. FRANCIS OF ASSISI**

200 Boon Lay Avenue, Singapore - 649 964

# பாடல்கள்

## 1. என் தலைமீது

என் தலைமீது உன் திருஇரத்தம்
சொரிந்து பாவங்களை
கழுவும் என் இயேசுவே

1. இறை உன்னை மறந்து
பாவம் செய்தேன் – 2
உன் இதயத்திற்கெதிராய்
பாவம் செய்தேன்

2. பிறதெய்வம் தொழுது
பாவம் செய்தேன் – 2
உன் நிறையன்பிற்கெதிராய்
பாவம் செய்தேன்

3. அயலானைப் பகைத்து
பாவம் செய்தேன் – 2
உன் அன்புக்கு எதிராய்
பாவம் செய்தேன்

## 2. சிலுவையில் தொங்கும்

சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்
திருஇரத்தம் சிந்தும் தேவனைப் பார்

1. முள்முடி தலையில் பாருங்களே
முகமெல்லாம் இரத்தம்
அழகில்லை – 2
கள்வர்கள் நடுவில்
கதறுகின்றார் – 2
கருணை தேவன் உனக்காக

2. கைகால் ஆணிகள் காயங்களே
கதறுகின்றார் தாங்க முடியாமல் – 2
இறைவா ஏன் என்னை கை நெகிழ்ந்தீர் – 2
என்றே அழுது புலம்புகின்றார்

## 3. சுமை சுமந்து

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
வாருங்கள் நம் ஆண்டவர்
அழைக்கின்றார்
இளைப்பாற்றிக் கொடுக்கின்றார்

1. இருகரம் விரித்தவராய்
இதயத்தைத் திறந்தவராய் – 2
இறைவன் இருக்கின்றார்
இனியும் தாமதமேன்?

2. வரும் வழி பார்த்தவராய்
வரம் மழை பொழிந்தவராய் – 2
வந்தவர் இருக்கின்றார்
விரைந்திட தாமதமேன்

## 4. யாரிடம் செல்வோம்

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வுதரும் வார்த்தை எல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன
யாரிடம் செல்வோம் இறைவா
இறைவா – 4

1. அலைமோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும் – 2
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய் – 2

2. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதய்யா – 2
குணமதிலே மாறாட்டம்
குவலயந்தான் இணைவதெப்போ – 2

## 5. இயேசு நாதர் கூறுகிறார்

இயேசு நாதர் கூறுகிறார் இதை
கொஞ்சம் கேளுங்கள் உங்கள்
இதயத்தை திறந்து சொல்வதை
கேட்டு மனிதராய் வாழுங்கள்

1. மாசறு பொன்மனம் படைத்தவன்தானே
உலகில் முழு மனிதன் – 2 புவி
மாந்தருக்காக தியாகங்கள் செய்பவன்
மனிதருள் அவன் புனிதன் – 2

2. ஆசையை வென்றவன் அகிலத்தை வென்றவன்
ஆவான் இது உண்மை – 2 நல்
அமைதியை கெடுக்கும் மனச்சுமை குறைந்தால்
ஆயிரம் வரும் நன்மை – 2

## 6. சுமந்து காக்கும்

சுமந்து காக்கும் இயேசுவிடம்
சுமைகளை இறக்கி வைத்திடுவோம்

1. ஆயன் ஆட்டை சுமப்பதுபோல
ஆண்டவர் நம்மை சுமக்கின்றார் – 2
பசும்புல் மேய்ச்சல் நமக்குண்டு
பயப்படாதே சிறுமந்தையே – 2

2. தாயின் வயிற்றில் தாங்கியவர்
தலை நரைக்கும்வரை தாங்கிடுவார் – 2
விடுதலை கொடுப்பவர் இயேசுவன்றோ
வியாதிகள் தீமைகள் வென்றுவிட்டோம் – 2

3. கண்ணின் மணிபோல் காக்கின்றார்
கருத்தாய் நம்மை பார்க்கின்றார் – 2
கழுகுபோல் சிறகின் மேல் வைத்து
காலமெல்லாம் நம்மை சுமக்கின்றார் – 2

## 7. ஒருபோதும் உனை பிரியா

ஒருபோதும் உனைபிரியா
நிலையான உறவொன்று வேண்டும் – என்
உடல்கூட எரிந்தாலும்
உன் நாமம் நான் சொல்ல வேண்டும்

நினைவிலும் நீயே என் கனவிலும் நீயே – 2
நீங்காத நிழலாக வா இறைவா

உன் கையில் என்னை நீ பொறித்தாய்
பெயர் சொல்லி அன்பாய் என்னை அழைத்தாய்
ஏன் என்னை நீ தெரிந்தாய்
என் வாழ்வில் ஏன் நுழைந்தாய் – உன்
மாறாத அன்பில் மகிழ்வொன்று கண்டேன் – தாய்
உறவொன்று தேடும் பிள்ளைபோல் நின்றேன்
உன்னோடு நான் வாழுவேன்

## 8. அப்பா நான் தவறு செய்தேன்

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன் – நான்
கெட்டலைந்து ஓடி வந்தேன் – என்னைக்
கண்பாரும் உந்தன் பிள்ளை நான்

பாடிவரும் பறவைகளும் காடுகளில் மிருகங்களும்
உன் அன்பில் மகிழ்ந்திருக்க – நான்
உன்னை பிரிந்து நொந்தேன்
சுமைகளில் சோர்ந்தோரே

என்னிடத்தில் வாருமென்றீர் – அந்த
ஆறுதல் வார்த்தை என்னை
உன்னிடத்தில் ஈர்த்ததையா

வாழ்வு தரும் வசனமெல்லாம்
நீர் என்று அறிந்தபின்னே
வேறெங்கு நான் போவேன்
எந்தன் புகலிடம் நீரே அப்பா

## 9. நான் பாவி இயேசுவே

நான் பாவி இயேசுவே
என் வாழ்வை மாற்றுமே – 2

விழுந்துவிட்டேன் மனம் உடைந்து விட்டேன்
என்னை தேற்றும் இயேசுவே – 2

கலங்குகிறேன் மனம் குழம்புகிறேன்
மன அமைதி தாருமே – 2

புரியவில்லை பாதை தெரியவில்லை
பாதை காட்டும் இயேசுவே – 2

சோர்ந்து விட்டேன் மனம் உடைந்து விட்டேன்
என்னை தேற்றும் இயேசுவே – 2

நாடுகிறேன் உம்மை தேடுகிறேன்
எந்தன் தாகம் தீருமே – 2

## 10. இயேசுவின் பெயர் சொன்னால்

இயேசுவின் பெயர் சொன்னால்
இதயத்தில் இனிமை வரும்
நேசத்தில் நிலைத்திருந்தால்
நெஞ்சினில் அமைதி வரும்

1. அன்பின் வடிவானது
ஆண்டவன் திருப்பெயரே – 2
இன்பம் நிறைவானது
இயேசுவின் திருப்பெயரே

2. அலகையின் வல்லமைகள்
அடங்கிடச் செய்துவிடும் – 2
கலங்கிடும் இதயங்களை
கரைகொண்டு சேர்த்துவிடும்

## 11. என் விழியே

என் விழியே இயேசுவை நீ பாரு
என் நாவே இயேசுவை நீ பாடு

1. என் சிரசே இயேசுவை
நீ வணங்கு – 2
என் நெஞ்சே இயேசிடம்
உன்னை வழங்கு
இயேசிடம் உன்னை வழங்கு

2. என் கரமே இயேசுவின்
வழி எழுது – 2
என் காதே
இயேசுவின் மொழி கேளு

3. என் காலே இயேசுவின்
வழி செல்லு – 2
என் உயிரே
இயேசுவின் பதம் சேரு – 2

## 12. கிறிஸ்துவின் அன்பினின்று

கிறிஸ்துவின் அன்பினின்று
நம்மை பிரிப்பவன் யார் – 2

1. வானத்தின் தலைமை தூதர்களோ
வல்லமை வலிமை மிக்கவரோ – 2
வானத்தில் உள்ள வேறெதுவோ
வாக்கினில் வந்த படைப்புகளோ

2. வாட்டிடும் வயிற்றுப் பெரும் பசியோ
வாழ்வினை முடிக்கும் கொடும் வாளோ – 2
ஆட்டிடும் உலகின் இடர் பலவோ
அதிர்ச்சியை அளிக்கும் மரணங்களோ

## 13. வியாகுல மா மரியே

வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே சிந்தை நொந்தழுதாயோ

1. பன்னிரு வயதில் ஆலயத்தில் அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை – 2
கரங்களை விரித்தே கள்வனைப் போல்
கழுமரத்தில் கண்டதினால்

2. திருமணப் பந்தியில் கனிரசமே அன்று
அருளிய திருமகனை – 2
குருதி சிந்தி கடற்காடியினை இன்று
பருகிடக் கண்டதினால்

## 14. இயேசுவின் பின்னால்

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்க மாட்டேன் – 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால் – 2
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை அடைந்தேனே

1. அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை – 2
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் – 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

2. தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியில் நமக்கெல்லாம்
சேயர் நம்மை செவ்வழி நடத்தும்
ஆயன் அவரன்றோ – 2
ஆயனே முன்னால் அலகையே பின்னால் – 2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

## 15. நெஞ்சத்திலே தூய்மை

நெஞ்சத்திலே தூய்மை உண்டோ
இயேசு வருகின்றார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கின்றார்

1. வருந்தி சுமக்கும் பாவம் நம்மை
கொடிய இருளில் சேர்க்கும் – 2
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும் – 2

2. குருதி சிந்தும் நெஞ்சம் நம்மை
கூர்ந்து நோக்கும் கண்கள் – 2
அங்கு பாரும் செந்நீர் வெள்ளம்
அவர் பாதம் வந்து சேரும் – 2

# திருச்சிலுவைப்பாதை

குரு : பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே

எல் : ஆமென்

குரு : யாராவது என்னைப் பின்பற்றி வர விரும்பினால், தன்னையே மறுத்து தன் சிலுவையை சுமந்து, எனக்குப் பின்னே வரட்டும் என்று கிறிஸ்து நாதர் கூறினார். எங்கள் பாவங்களுக்காக சிலுவை சுமந்த இயேசுவே, எங்கள் பாவத்தின் கனத்தையும், உங்கள் அன்பின் பெருமையையும் கண்டு நாங்கள் மனம் வருந்துகிறோம். எங்கள் பாவ பரிகாரத்திற்காக இதோ கல்வாரியின் பாதையில் உமக்குப் பின் செல்ல விரும்புகிறோம். ஒவ்வொரு நாளும் எங்களுக்கு நேரும் சிலுவையாகிய துன்பங்களை மகிழ்ச்சியோடு சுமந்து, நீர் எமக்கு காட்டிய வழியை பின்பற்ற கிருபை செய்யும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: எங்கே சுமந்து போறீர் / சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர் / பொங்கும் பகைவராலே / அங்கம் நடுநடுங்க / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட முதலாம் தலம்

## இயேசு நாதர் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : பிலாத்து என்ற அதிபதி விதித்த அநியாய மரணத்தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவினிடத்தில் விளங்கின பெரும் பொறுமையை தியானிப்போமாக. அவருக்கு மரண தீர்ப்பு அளித்தது பிலாத்து மட்டுமல்ல, இங்கிருக்கும் நாமும் சகல பாவிகளும் நம்முடைய பாவங்களினால் அவரை கொலை செய்ய வேண்டி ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்று நன்றாக யோசித்து அறியக் கடவோம். ஆகையால் மெய்யான துக்கத்தினால் மனங் கசந்து அழுது அவருடைய பாதத்தில் வீழ்ந்து நம்மைப் பொறுத்தருள மன்றாடுவோமாக.

### செபிப்போமாக

எல் : எங்கள், திவ்ய கர்த்தரே, மாசில்லாத இயேசுவே, எங்களின் பாவக்கறை உமது மரணத்திற்கு காரணமானதினால் நாங்கள் மனம் நொந்து மிக்க மனஸ்தாபப்பட்டு, எமது பாவங்களை அருவெறுத்துவிட்டு, எங்கள் வருத்தத்தினாலும், தபசினாலும், உம்முடைய இரக்கத்திற்கும், பொறுமைக்கும் நாங்கள் பாத்திரவான்களாகும்படிக்கு உம்மை மன்றாடுகிறோம்.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாட் : மனித பாவத்தாலே / மரணத் தீர்வை பெற்று / தூய செம்மறி போல துக்கத்துடன் வருந்தி / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட இரண்டாம் தலம்

## இயேசு நாதர் சிலுவை சுமந்து செல்கிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனிதசிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : இயேசு சிலுவையை சுமந்துகொண்டு, எபிரெய மொழியில் கொல்கதா எனப்படும் இடத்திற்குச் சென்றதை தியானிப்போமாக. நம்முடைய திவ்ய போதகரும் பரமகுருவுமாயிருக்கிற இயேசு நாதர் கசை வாரினால் அடித்து காயப்படுத்தப்பட்டு, நொறுக்கப்பட்டு, இரத்தக்கறைபடிந்த தமது திருத்தோளில் தம்முடைய நிர்ப்பந்தமான சாவின் பயங்கரமான, சாவுக்கேதுவாகிய திருச்சிலுவையை எப்படி பிரியத்தோடும், சந்தோஷமாகவும் சுமந்து சென்றார் என்பதை சிந்திப்போமாக. நமக்கு வருகின்ற ஆக்கினை, கஷ்டங்கள், துன்பங்களை மிகுந்த பொறுமையோடு ஏற்றுக்கொண்டு, நமது சிலுவையாகிய அவற்றை நாம் எப்படி சுமக்க வேண்டும் என்பதை நமக்கு கற்றுக்கொடுக்க சித்தமானார்.

### செபிப்போமாக

எல் : எங்கள் இனிய இயேசுவே, தேவரீர் முழுவதும் மாசற்றவராய் இருக்கையில் இந்த பாரமான சிலுவை உமது பேரில் அல்ல எல்லா அக்கிரமங்களும் நிறைந்த கொடிய பாவிகளாகிய எங்கள் மேல் சுமத்தப்பட வேண்டியதாக இருந்தது. உம்முடைய நீதியை பெற்றுக்கொள்ளவும், பரலோக அரசில் சேரவும், அதன் வழியாக உமது சித்தம் எங்களுக்கு வருகிற துன்பம், பொல்லாப்புகளை உம்முடைய திவ்ய மாதிரியின்படியே நாங்கள் பொறுமையோடு தாங்கிக் கொள்ள எங்களுக்கு மனத்திடனைக் கொடுத்தருளும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல் : பாரச்சிலுவையை நீர் / பாசத்துடனே அனைத்து / பாவத்தின் சுமை தாங்கி / ஆர்வத்துடன் நடந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட மூன்றாம் தலம்

## இயேசு நாதர் முதல்முறை தமது பாரமான சிலுவையோடு குப்புற விழுகிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : நம்முடைய மீட்பராகிய இயேசுநாதர், கபால மலையின் வழியில் மிக்க துன்பத்தோடு நடப்பதை தியானிப்போமாக. அவர் பூங்காவில் இரத்த வியர்வை வியர்த்தபோதும், கசை வாரினால் அடிபட்டபோதும், முள்முடி வைக்கப்பட்டபோதும், மிகுதியாய் இரத்தத்தை சிந்தியதால் அதிக பலவீனமடைந்து, சிலுவையின் பாரத்தைத் தாங்கமுடியாமல் குப்புற விழுகிறார். உடனே சேவகர் கொடூரமாய் அடித்தாலும் அவர் சிறிதும் கோபியாமல் மறுபடியும் எழுந்து சிலுவையை சுமந்தார். இப்படி நம்முடைய பாவ அக்கிரமங்களை வெறுத்துத் தள்ளவும், நாம் எப்பாவத்தில் விழுந்தாலும் உடனே தக்க தபசினால். பாவத்திலிருந்து மீள வேண்டுமென்று கற்றுக்கொள்ளவும் கிருபை செய்தருளினார்.

### செபிப்போமாக

எல் : எங்கள் நல்ல இயேசுவே! எப்பக்கத்திலும் எங்களுக்கு நேரிடுகிற தீமை, ஆபத்துகளில் இருந்து எங்களை இரட்சியும். நன்மைகளை செய்வதில் மிகவும் பலவீனர்களாகிய அடியோர்களை திடப்படுத்தி நாங்கள் தைரியமாய் கபால மலை வரை தேவரீருக்குப் பின் சென்று ஜீவியம் கொடுக்கின்ற சிலுவை மரத்தின் இன்பமான பலனை அடையவும், பரலோகத்தில் நித்திய ஆனந்தத்தை அடையவும் தயைபுரியும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: கல்வாரிமலை நாடி / தள்ளாடி தரை வீழ்ந்து / எல்லோரின் பாவங்களை / தனிமையாய் சுமந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட நான்காம் தலம்

## இயேசு தமது பரிசுத்த மாதாவை சந்திக்கிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : திவ்ய கர்த்தராகிய இயேசு, தம் பிரியமான தாயை இவ்விதம் கொடிய குரூரமான வேளையில் பார்த்ததாலும், மாதா தம் நேசமகன் திரளான மக்கள் மத்தியில் நிந்திக்கப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும், கல் நெஞ்சமுள்ள சேவகர்களால் மரண கொலைக்களத்திற்கு கூட்டிக் கொண்டு போகப்படு கிறதை பார்க்கிறதாலும் இருவரும் அனுபவித்த துன்பம் இவ்வளவு என்று யோசிப்போமாக. இயேசு படும் வேதனை களைப் பார்த்து இரக்கமுள்ள மாதாவின் இதயம் ஆயிரம் அம்பு களால் குத்தப்பட்டு, துக்கக்கடலில் அமிழ்ந்தது போலாயிற்று. தமது பிரிய மகனை அக்கொலைகாரரிடமிருந்து மீட்க மிகுந்த ஆசைப்பட்டாள். ஆனால் நமது மீட்பு இவ்வாறாக நிறைவேற வேண்டுமென அறிந்து தமது குமாரனுடைய பலியோடு தனது அன்பையும் பலியாக ஒப்புக் கொடுத்து அவரது சகல கஷ்டம், துன்பம், வாதைகளுக்கும் பங்காளியாக, தன் சாவுக்கு அஞ்சாமல் கடைசிவரை அவருக்குப் பின் செல்கிறாள்.

**செபிப்போமாக**

எல் : வியாகுல மாதாவே, துக்கம் நிறைந்த மரியே, பரிசுத்த கபால மலை வரை இயேசுவின் பின் செல்கையில் நீர் கொண்டிருந்த மிகுந்த அன்பின் பற்றுதலையும், சிலுவையினடியில் உம்மிடத்தில் விளங்கின மனதிடனையும், நாங்கள் கண்டு பாவித்து, உம்மோடு தைரியமாக சிலுவையினடியில் நிலை கொண்டு அதை விட்டுப் பிரியாதிருக்கும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: மாமரி கன்னி அன்னை / மகனின் கோலங்கண்டு / மா துயருடன் வாடி / மனம் நொந்து வருந்த / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட ஐந்தாம் தலம்

## இயேசு தமது சிலுவையை சுமந்து போகிறதற்கு சீமோன் உதவி செய்கிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : சிரோனே ஊரைச் சேர்ந்த சீமோன் கிராமத்திலிருந்து அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவனை கிறிஸ்துவின் சிலுவையை சுமக்கும்படி கட்டாயப்படுத்தினர். நம்முடைய மீட்பரான இயேசுவுக்கு நமது பேரிலுள்ள மட்டில்லாத அன்பினை தியானிப்போமாக. அவர் தன் சிலுவையை சுமப்பதற்கு பிறருடைய உதவியை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் என்ன? நம்முடைய துன்ப துயரங்களை அவருடைய துன்பங்களோடு சேர்த்து, அவருடைய பாடுகளுக்கு நம்மை பங்காளிகளாக்க வேண்டுமென்று இவ்விதமாக கற்றுக்கொடுக்க சித்தமானார்.

### செபிப்போமாக

எல் : எங்கள் திவ்ய போதகராகிய இயேசுவே, பாடுகளின் பாத்திரத்திலே அதிக கசப்பாயிருந்த எல்லாவற்றையும் தேவரீர் தாமே உட்கொண்டு, அதில் சிறிதுமட்டும் எங்களுக்கு வைக்க சித்தம் கொண்டீரே, தேவரீர் உம்முடைய சித்தத்தினால் இரங்கி எங்களுக்கு தந்த சிறு துன்பங்களையும் வேண்டாமென்று தள்ளிப்போடாமல் மனபற்றுதலுடன் அவற்றை ஏற்றுக் கொண்டு, எங்களுடைய பாவங்களுக்கும் மற்ற மனிதருடைய பாவங்களுக்கும் பரிகாரம் செய்ய எங்களுக்கு மனதிடனை தந்தருளும் சுவாமி.

குரு : அன்பான இயேசுவே, உம் சிலுவையை சுமக்க என்னை அழைத்தீரே, எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி, இரக்கமாயிரும்.

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும், சுவாமி இரக்கமாயிரும்.

பாடல்: உதிரமாறாய் சிந்தி / உற்ற வீரமிழந்து / சீரோன் சீமோன் துணையை / ஏற்று வழிநடந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட ஆறாம் தலம்

## வெரோனிக்கா கிறிஸ்துவின் திருமுகத்தை துடைக்கிறாள்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : அந்த பரிசுத்த பெண், கர்த்தரை பார்க்க, கொடிய சேவகர் படை நடுவே, தைரியமாக உட்புகுந்தாள். இயேசுவின் முகம் உமிழ்நீர், தூசி, வியர்வை, இரத்தக்கறை இவற்றால் நிறைந்து வேற்றுருவாய் இருந்தது. சகல புனிதர்களையும் ஆனந்தத்தில் ஆழ்த்துகிறதும், தூதர்கள் பார்க்க கூசுகிறதுமாய், பிரகாசமாக இருந்த அந்த இனிய முகம் இப்படி மாறியிருப்பதைக் கண்டு வருந்தி அவருடைய முகத்தை வணக்கத்துடனே துடைக்கிறாள். உடனே அந்த திருமுகத்தின் மகிமையுள்ள சாயல், அதை துடைத்த துண்டிலே பதிந்ததினால் அவளது விசுவாசத்திற்கு பலனாயிற்று.

**செபிப்போமாக**

எல் : சகல மக்களிலும் அதிக சௌந்தரியமுள்ள இயேசுவே! தேவரீருக்கு எங்கள்பேரில் உள்ள பட்சமிகுதியானது, தேவரீரை அந்த கோலமாக்கிப் போட்டது. ஆண்டவரே, இரக்கமுள்ள கர்த்தாவே, வெரோனிக்காளின் அன்பை ஏற்றுக்கொண்ட இயேசுவே, அநாதைகள், நோயாளிகள், கைதிகள், தாழ்த்தப் பட்டோர் ஆகியோரை புறக்கணியாமல், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படியான நல்ல மனதை எங்களுக்குத் தாரும். எங்களுடைய அண்டை அயலாருக்கு உதவி தேவைப் பட்டபோது, நாங்கள் பாராமுகமாய் இருந்திருந்தால் அதற்காக எங்களை மன்னியும் சுவாமி. மற்றவர் மீது அன்பும், இரக்கமும் காட்ட எங்களுக்கு உதவும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: கர்த்தனே, உம் வதனம் / இரத்தக்கறையால் மங்கி / உத்தமி வெரோனிக்காள் / வென்துகிலாற் துடைத்தும் / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட ஏழாம் தலம்

## இயேசுநாதர் இரண்டாம் முறை குப்புற விழுகிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : இயேசு நாதர் மறுபடி இளைத்து, களைத்து சிலுவையோடு கீழே விழுகிறார். தமது பலியின் பயங்கரமான பாரச்சிலுவையின் அடியிலே சோர்ந்து கிடக்கும்போது, கொலைகாரர்கள் அவரை கொடூரமாய் அடிக்கிறார்கள். ஆராதனைக்குரிய நமது மீட்பர் நம்மீது வைத்த அளவில்லாத அன்புக்கு அத்தாட்சி காண்பிக்க வேண்டி, இப்படி இரண்டாம் முறை தரையில் விழ சித்தமானார். ஏனெனில் நாம் அடிக்கடி பற்பல குற்றங்களில் விழுந்தாலும், தைரியமற்ற அவநம்பிக்கைப்படாமல், தம்முடைய தயவை நம்பிக் கொண்டு உறுதியான பிரதிக்கினையோடு எழவேண்டும் என்றும், எல்லா துன்ப சோதனைகளில் அகப்பட்டிருந்தாலும் தைரியத்தை கைவிடலாகாதென்றும், பரலோகத்தின் வழி துன்பம் நிறைந்ததாகையால் பரலோக இன்பத்தை அடைய, செம்பொன், உலையில் சுத்தமாவதுபோல துன்பங்களின் வழியாய் நாம் சுத்தமாக வேண்டுமென்றும், இவ்விதம் நமக்கு கற்றுக்கொடுக்க சித்தமானார்.

**செபிப்போமாக.**

எல் : எங்களுக்கு பலமாகிய அன்பு இயேசுவே, அடியோர்கள் எந்த பாவத்திலும் திரும்ப விழாதபடிக்கு எங்களை காத்தருளும். நரகத்திலே நின்று எங்களை மீட்பதற்காக தேவரீர் அனுபவித்த வருத்தங்களை அடியோர்கள் வீணாக்கி முடிவில்லாத கேட்டிற்கும் துன்பத்திற்கும் உள்ளாகாதபடி எங்களை காத்தருளும் சுவாமி.

குரு : எங்களுக்காக சித்திரவதை அனுபவித்த ஆண்டவரே எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல் : பாவங்கள் ஒன்றாய் சேர்ந்து / பார சுமையினாலே / மீண்டும் தரையில் வீழ்ந்தும் / வீரத்துடன் எழுந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட எட்டாம் தலம்

## எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : திரளான மக்களும், இயேசுவுக்காக மார்பில் அடித்துக் கொண்டு புலம்பும் பெண்களும், கூட்டமாக அவரை பின் தொடர்ந்தார்கள். இயேசு அவர்களுடைய பக்கம் திரும்பி, எருசலேம் நகரத்துப் பெண்களே, எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும், உங்களுடைய பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். இவ்விடத்தில் நமது மீட்பரின் தயாளத்தை சற்று தியானிப்போமாக. கிறிஸ்துவின் துன்பங்களைக் கண்டு புலம்புகின்ற புண்ணிய பெண்களுடைய வியாகுலத்தின் பேரில் மனமிரங்கி, தம் துன்பங்களை மறந்தாற்போல், அவர்களுடைய துன்பத்திற்கு மட்டும் ஆறுதல்கூற முயல்கிறார். அவர்மேல் நாம் இரக்கப் படுவது போதாதென்றும், நாம் நம் பாவங்களுக்காக அழுது, மனம் வருந்தி, அவற்றால் நமக்கு வரும் பயங்கரமான தண்டனைகளை நாம் தபசினால் போக்கிட வேண்டும் என்று கற்றுக் கொடுக்க சித்தமானார்.

**செபிப்போமாக**

எல் : எங்கள் நேசத்திற்குரிய இயேசுவே, துன்புறும் ஆத்துமாக் களுக்கு உண்மையான ஆறுதல் தரும் கர்த்தாவே, உமது இரக்கத்தினால் எம்மைப் பாரும். எருசலேம் நகரத்து புண்ணிய பெண்களைப் போல, சிலுவையின் பாதையில் உமக்குப் பின் தைரியமாகச் சென்று உமது வாயினின்று வரும் ஞான ஜீவியம் தரும் வார்த்தைகளைக் கேட்கவும், சொல்ல முடியாத ஆனந்த முள்ள உமது தயாளத்தில் ஆறுதலை அனுபவிக்கவும், அடியோர் களுக்கு வரம் தருமாறு தேவரீரை மன்றாடுகிறோம்.

குரு : ஆண்டவராகிய இயேசுவே பாவிகளின் ஏக நம்பிக்கையே எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: புண்ணிய பெண்மணிகள் / புலம்பி அழும் வேளை / தேற்றுதல் கூறி நீரும் / நேச கண்ணீர் சொரிந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட ஒன்பதாம் தலம்

## இயேசுநாதர் மூன்றாம் முறை குப்புற விழுகிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : என் மக்களே, நான் உங்களுக்கு என்ன தீமை செய்தேன்? அல்லது எவ்வகையில் உங்களை வருத்தினேன்? பதில் கூறுங்கள். எகிப்து நாட்டிலிருந்து உங்களை மீட்டேன். ஆனால் நீங்கள் இச்சிலுவையை தயாரித்தீர்கள். நாற்பது ஆண்டுகள் பாலை வனத்தில் மன்னாவினால் உங்களை பராமரித்தேன். அதற்காகவா என்னை கல்தூணில் கட்டி அடித்தீர்கள்? விஷத்தைக் கொடுத் தீர்கள்? இன்னும் நான் உங்களுக்கு செய்யாது விட்டதென்ன? தன் பாடுகளுக்குப் பின்னும் நரகத்தில் விழும் எண்ணற்ற பாவி களை நினைத்தவுடன் பலமற்று சோர்ந்து மூன்றாம் முறையும் தரையில் குப்புற விழுந்தார்.

### செபிப்போமாக

எல் : எங்கள் சினேகப் பலியான இயேசுவே, இங்கேயா மனிதர் களுடைய மீட்பிற்காக உமது உயிரை கொடுக்கப் போகிறீர்? ஆண்டவரே அடியோர்கள் பரலோகத்தில் எங்கள் புகழ்ச்சியின் பலியை, நித்திய காலமும் உமக்கு ஒப்புக் கொடுக்க தகுதியுள்ள வர்கள் ஆகும்படிக்கு, உமது திரு இரத்தம், பெரும் பலன்களை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: தூர வழி சிலுவை / தாங்க பெலமுமின்றி / மூன்றாம் முறை தரையில் / முகம் படிந்தெழுந்தும் / எங்கே போறீர்?



# இயேசு நாதர் பாடுபட்ட பத்தாம் தலம்

## இயேசுநாதருடைய ஆடைகளை களைகிறார்கள்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : திரளான மக்களுக்கு முன்பாக கொலைகாரர்கள், இயேசுவின் திரு ஆடைகளை மானபங்கத்தோடு களைந்தபோது, அவர் அனுபவித்த துக்கமும், வேதனையும் எம்மாத்திரம்? அவருடைய உடலில் பட்ட காயங்களோடு அவருடைய ஆடை ஒட்டி காய்ந் திருந்ததால், அவை உரிக்கப்பட்டபோது அவரது காயங்கள் திரும்பவும் திறந்துவிட, அவரது திரு தசை எப்பக்கத்திலும் கிழிய, கசைகள் முதலிய ஆயுதங்களால் அடிபட்டதினாலே அவருக்கு உண்டான கொடூர வேதனைகளை மறுபடியும் அனுபவித்தார். மனிதருடைய கெட்ட சுகங்களையும் அக்கிரமங் களையும் பற்றி உத்தரிக்க, ஆண்டவரின் திரு சரீரத்தில் உண்டான கொடூர நோவுகளைப் பார்த்து சகல பாவங் களையும் வெறுத்து விடாதிருக்கலாமோ?

**செபிப்போமாக**

எல் : எங்கள் மதுர இயேசுவே, திவ்ய ஆட்டுக்குட்டியே, பலியாகவோ இக்கொலைக் களத்திற்கு வந்து சேர்ந்தீர்? ஐயோ, தேவரீர் முறையிடுவதற்கு வாய் திறவாமல் எவ்வளவோ பொறுமை யாயிருந்தீர்? தேவரீருடைய மௌனம் மிகவும் திடமுள்ள பிரசங்கம் போல், துன்பத்தில் எங்களுடைய பொறுக்காமை யையும், முறைபாடுகளையும் நாங்கள் அடக்க வேண்டுமென்று உறுதியாய் கற்றுக்கொடுக்கின்றது. ஆராதனைக்குரிய இரட்சகரே, நாங்கள் எங்களிடத்திலுள்ள பழைய துர்க்குணங் களை களைந்துவிட்டு, உமது திருவருளாகிய புனித ஆடையை தரித்துக்கொண்டு உமது இருதயத்தின் நற்குணங்களை அனுசரிக்க கிருபை செய்தருளும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: நீட்டாடை கழற்றவே / கோடிக் காயங்களாலே / இரத்தம் ஆறாய் பெருக / வேதனையால் வருந்தி / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட பதினோராம் தலம்

## படைவீரர்கள் இயேசுநாதரை சிலுவையில் அறைந்தார்கள்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : நம்முடைய மீட்பராகிய இயேசு, சிலுவையில் அறையப்படு வதற்காக கொலைகாரர்களுக்கு தம் கை கால்களை நீட்டி விரித்துக் கொடுத்ததை தியானிப்போமாக. அவருடைய திரு கை கால்களில் கொடிய பாதகர் பெரும் இரும்பு ஆணிகளை வைத்து சுத்தியால் அடித்து துளைக்கிறபோது, அவர் அனுபவித்த வேதனை இவ்வளவென்று சொல்ல முடியுமோ? அப்போது அவரது திரு தசை கிழிய, எலும்புகளின் மூட்டுகள் பிசக, நரம்புகள் தெறிக்க, இரத்த நாளங்கள் அறுந்து போக இரத்தம் வெள்ளமாய் ஓட, அவர் தவித்து அயர்ந்து மிகவும் பலவீனப்பட்டது அல்லாமலும், எத்தனை கொடிய தாகத்தின் உபத்திரவத்தையும் அனுபவித்தார்.

### செபிப்போமாக

எல்: ஓ, பாவமே, ஓ, சபிக்கப்பட்ட பாவமே, எங்கள் மீட்பின் பலியாகிய திவ்ய கர்த்தரே, உம்மை சொல்லில் அடங்காத இத்தனை ஆக்கினைக்குள்ளாக்கி துக்கக்கடலில் அமிழ்த்தினது நீயே. கிறிஸ்தவர்களே, நமது மீட்பர் நம்மீது கொண்டுள்ளது எவ்வளவு அதிசயமான நேசம், அதை பார்த்து நமது நெஞ்சம் பிளந்து, தேவ சிநேகத்தில் அக்கினியால் பற்றி எரியக்கடவது. நமது இதயம் இயேசுவின் திரு இருதயத்தோடுகூட சிலுவையில் அறையப்படவும், நமது கண்கள் இரவும் பகலும் கண்ணீர் விட்டு அழவும்கடவது.

குரு : பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையில் தொங்கிய ஆண்டவராகிய இயேசுவே எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: நீட்டிய கை கால்களை / நீண்ட இரும்பாணிகள் / நிஷ்டூரமாய் அறைய / நேசத்தினாலே வெந்து / எங்கே போறீர்?



## இயேசு நாதர் பாடுபட்ட பன்னிரண்டாம் தலம்

## இயேசுநாதர் சிலுவையில் மரிக்கிறார்

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : எல்லா நன்மைகளையும் உடைய இயேசு நாதர், இரண்டு பாதகர்கள் நடுவிலே சிலுவையில் மரிக்கிறதைப் பார்த்து, அவரது அன்பின் மிகுதியையும், மதுரத் தன்மையையும், தியானிப்போமாக. அவர் தம் பிதாவை நோக்கி, தம்மை கொலை செய்கிறவர்களுக்காக பொறுத்தருளும் என்று கேட்கிறார். நல்ல கள்ளனைப் பார்த்து, இன்று நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று சொல்கிறார். தம் சீடனுக்கு தம் தாயாரை மாதாவாக ஒப்படைக்கிறார். பிதாவே இதோ உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று உரத்த சத்தமிட்டு உயிரை விடுகிறார். உடனே உலகமெல்லாம் அவரது தெய்வத் தன்மையை, அறிக்கையிடுகின்றன. சூரியன் இருளடைந்து, பூமி அதிர, கற்பாறைகள் பிளந்துபோக, உலக மெல்லாம் ஆண்டவர் மரிக்கிறதைப் பார்த்து துக்கத்தினால் அமிழ்ந்து போக விரும்புவதாக தோன்றுகிறது.

**செபிப்போமாக**

எல் : ஒ, பாவிகளே இப்படிப்பட்ட பரிதாபத்திற்குரிய சமயத்தில் நாம் மாத்திரம் மனம் இளகாதிருப்போமா? மரிக்கிற நம் ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். நம் பாவங்கள் அவரை எவ்விதம் துர்பாக்கிய நிலையில் வைத்ததென்று கண்டறிவோம். ஆனாலும் நாம் நம் பாவங்களை வெறுத்து, மெய்யாக வருத்தப்பட்டால் நம்மை மன்னிக்க சித்தமாயிருக்கிறார். இதோ உங்களுக்காக காத்துக்கொண்டிருக்க, அவரது கால்கள் கட்டப்பட்டுள்ளன. நம்மை இரக்கத்தோடு அணைத்துக்கொள்ள தம் கரங்களை விரித்துக் கெண்டிருக்கிறார். தனது அருளைப் பொழிய அவர் திருவிலா திறக்கப்பட்டும், ஊடுருவப்பட்டும் இருக்கிறது. சமாதானமும், ஆறுதலும் கொடுக்க அவரது சிரசு நம் பக்கம் சாய்ந்துள்ளது. நமக்காக அவர் தம் உயிரை தந்தபடியால், நமது உயிரை நாம் அவருக்கு என்றென்றைக்கும் ஒப்புக் கொடுப்போமாக.

குரு : உமது மரணத்தினால் எனது மரணத்தை வென்ற ஆண்டவரே எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல் : சிலுவைப் பீடமேறி / மும்மணி நேரம் தொங்கி / நேயபிதாவை வேண்டி / ஆருயிர் ஒப்படைத்து / பலியானீர்



## இயேசு நாதர் பாடுபட்ட பதின்மூன்றாம் தலம்

## இயேசுவின் திருச்சரீரம் அரவது தாயின் மடியில் வைக்கப்படுகிறது

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : உருக்கம் நிறைந்த மாதா, தம் மகனுடைய மரணத்திற்குப் பின் அனுபவித்த சொல்லமுடியாத துயரத்தை தியானிப்போமாக. அவருடைய சீடர்கள் அவருடைய திரு சரீரத்தை, சிலுவையில் இருந்து இறக்கியபோது, மாதா அதை எவ்வளவோ துக்கத்தோடும் துரயத்தோடும் வாங்கி தனது மடியில் வைத்துக் கொண்டு அழுகிறாள். அவருடைய திருமுகம் வெளுத்து உருமாறி, இரத்தக்கறை பிடித்திருக்கிறதையும், கண்விழி பஞ்சடைந்து மங்கியிருக்கிறதையும், திருவாய் மூடியிருக்கிறதை யும், திருவிலா திறக்கப்பட்டிருக்கிறதையும், கைகால்கள் ஊடுருவப்பட்டிருக்கிறதையும் பார்த்து துக்கக்கடலில் மூழ்கி பரிதவிக்கிறாள். அந்த அகோரக்காட்சி மாதாவிற்கு தன் சாவை விட மகா கொடிய துன்பம் தருகிறது. அவளது துக்கத்தை இறைவன் மட்டுமே அறியமுடியும்.

### செபிப்போமாக

எல் : எங்கள் வியாகுல மாதாவே, உம்முடைய துக்கத்திற்கு காரணம் நாங்கள் அல்லவோ? உமது நேச குமாரனை சிலுவையில் அறைந்ததினால், உமது இதயத்தைக் குத்தியது எங்கள் பாவம் என்ற வாள்தானே. எங்கள் தயாளமுள்ள தாயே, எங்களுக்காக மன்றாடி மன்னிப்பை அடைந்து தந்தருளும். சிலுவையில் மரித்த எங்கள் அன்பரை நாள்தோறும் ஆராதிக்க உதவி செய்யும். எங்கள் மரண வேளையில் உமது அடைக்கலத்தை நாடி ஆறுதல் அடைய அருள்புரியும் தாயே.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல் : உமது மடி மீதில் / மரித்த மகன் தாங்கி / ஏழு சோக வாட்களால் / ஊடுருவி வருந்தி / தாயே நின்றீர்



## இயேசு நாதர் பாடுபட்ட பதினான்காம் தலம்
## இயேசுவின் திருச்சரீரம் அடக்கம் ஆகிறது

குரு : திவ்ய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி நன்றி செலுத்துகிறோம்.

எல் : ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

குரு : அரிமத்தியா ஊரைச் சேர்ந்த சூசை என்பவர் இயேசுவின் திருவுடலை எடுத்து புதிய வெண்ணிறத் துணியில் சுற்றி, அவர் வெட்டிய புதிய கல்லறையில் வைத்தார். பின் ஒரு பெரிய கல்லை புரட்டி கல்லறையின் வாயிலை அடைத்து விட்டுப் போய்விட்டார்.

### செபிப்போமாக

எல் : திவ்ய இயேசுவே, எங்கள் மீட்பிற்கும், ஆராதனைக்கும் உரியவரே, உமது உடல் இதோ ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறதே. எங்களை மீட்க தேவரீர் அனுபவித்த துன்பங்களையும், அவமானமுள்ள மரணத்தையும் அடிக்கடி தியானித்து, மனம் வருந்தி, உமது அன்பின் திருவருட்சாதன மாகிய, திவ்ய நற்கருணை வழியாய், உம்மை உட்கொள்ள புது இதயத்தோடு வரவேண்டுமென்று கற்றுக்கொடுக்க ஒரு புது கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டீரே. இக்கல்லறையில் நாங்கள் எங்கள் பாவங்களை எல்லாம் புதைத்துவிட்டு புண்ணிய வாழ்வில் உம்மோடு உயிர்க்கும் பாக்கியத்தைத் தந்தருளும் சுவாமி.

குரு : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

பாடல்: கர்த்தனே நின் உடலை / கல்லறைக்குள் அடைக்க / உத்தானும் ஜீவனுமாய் / உயிருடன் எழுந்து / காட்சி தந்தீர்

## பீடத்திற்கு முன்பாக

குரு : இறைவா எங்கள் ஆண்டவராகிய இயேசு நாதர், பாவிகளின் கைகளில் காட்டிக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் துன்பம் அடைந்து மீட்ட இந்த குடும்பத்தை கிருபையின் கண்கொண்டு பாரும்.

எல் : நித்திய ஜீவிய இறைவனின் மகனாகிய இயேசுவே, உலக மீட்பிற்காக தேவரீர் மத்தியான வேளையில், சிலுவை மரத்தில் அறையப்பட்டு, எங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக, இரத்தம் சிந்தினீரே. அந்த திரு இரத்தத்தைப் பார்த்து எங்களுடைய பாவங்களை மன்னிக்க வேண்டும் என்று தாழ்மையோடு மன்றாடுகிறோம்.

குரு : ஆண்டவரே, தேவரீர் பாடுபட்ட நேரத்திலே, துக்கம் என்கிற வாளால் ஆத்துமாவில் ஊடுருவப்பட்ட, உமது மாதாவாகிய கன்னித்தாய், உம்மிடம் எங்களுக்காக, இப்போதைக்கும் எமது மரண வேளையிலும், மனுப்பேச தேவரீர் தயைபுரிய வேண்டுமென்று உம்மை பிரார்த்தித்துக் கொள்கிறோம் சுவாமி.

எல் : பக்தி குறைந்து கொண்டு வருகிற இந்த காலத்தில் இளைஞர்கள் உம் மீது அதிக பற்று கொண்டு, உமது திருக் காயங்களை, புதுமையாக பதியப் பெற்ற புனித பிரான்சிஸ்குவை பின்பற்ற வரம் தாரும் தேவனே. எங்கள் மத்தியில் நல்ல கன்னியரும், குருக்களும், தோன்ற கிருபை செய்யும் சுவாமி.

குரு : பொறுத்தருளும் கர்த்தாவே, உமது மக்களின் பாவங்களைப் பொறுத்தருளும்.

எல் : என்றென்றைக்கும் எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

எல் : இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவரோடும், பரிசுத்த ஆவியோடும், வாழ்ந்து ஆட்சிபுரியும் இயேசுவின் திரு முகத்தைப் பார்த்து தந்தருளும் சுவாமி. ஆமென்.

குரு : பாப்பரசர் கருத்துகளுக்காக ஜெபிப்போம்.

எல் : பரலோகத்தில் இருக்கிற .............

குரு : பிதா. சுதன். பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்,

பாடல்- 1

எதை நான் தருவேன் இறைவா
உன் இதயத்தின் அன்பிற்கிடாக  } 2
எதை நான் தருவேன் இறைவா

குறை நான் செய்தேன் இறைவா
பாவக் குழியில் விழுந்தேன் இறைவா } 2
கறையாம் பாவத்தை நீக்கிடவே----2
நீர் கல்வாரி மலையில் இறந்தாயோ

பாவம் என்றொரு விஷத்தால்-நான்
பாதகம் செய்தேன் இறைவா } 2
தேவனே உன் திருப்பாடுகளால்----2
என்னைத் தேற்றிடவே நீர் இறந்தாயே

பாடல்- 2

கல் மனம் கறைய கண்களும் பனிக்க
கைகளைக் குவித்தேன் இறைவா
என் மனம் வருவாய் இறைவா

என்னகம் புகுந்து இதயத்தில் விழுந்து
பொன்னகம் புனைவாய் இறைவா--இங்கு
புன்மைகள் மறைந்து நன்மைகள் நிறைய
இன்னருள் தருவாய் இறைவா---2

பாசத்தைக் களைந்து பாவத்தை விலக்க
பாதத்தைப் பிடித்தேன் இறைவா--துயர்
வீசிடும் புயலும் வெகுண்டெழும் அலையும்
அமைந்திடப் பணிபாய் இறைவா---2

நான் என்னும் அகந்தை நரகத்தை அழித்து
நல்லுலகமைப்போம் இறைவ---இங்கு
பூவெனும் இதய பீடத்தில் எனையே
பலியாய் அமைப்பேன் இறைவா--2

## பாடல்-3

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்பு தாருமே இறைவா } 2
மன்னிப்பு தாருமே இறைவா

ஆண்டவர் ஆன்மாவை விரும்புன்கிறார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகிறார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்
ஆண்டவர் ஞானத்திற்கிருபை உண்டு
தண்டிக்க காலத்தைக் கடத்துகின்றார்
தண்டித்து கருணை சொல் கூறுகின்றார் பாவி
திருந்திட அருட்க்கொடை வழங்குகின்றார்---மன்னிப்பு

குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்து வைத்தால்
தேவன் குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்
பாவத்தை வெறுத்துத் தள்ளிடுவோம்
ஆபத்தை விலக்கி சென்றிடுவோம்
ஆன்மாவை அவரிடம் காட்டிடுவோம்
அதன் அவலங்கள் கழுவிட வேண்டிடுவோம்---மன்னிப்பு

பாடல்-4

தயை செய்வாய் நாதா என் பாவங்களை நீக்கி---2

அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்
அனுதபித்து என் பிழையை அகற்றுமையா
பாவமதை நீக்கி என்னைப் பனிபோலாக்கும்
தோஷமெல்லாம் தீர்த்து என்னை தூய்மையாக்கும்

என் குற்றம் நான் அறிவேன் வெள்ளிடை மலைபோல்
தீவினையை மறவாதென் மனது என்றும் -உம்
புனிதத்தைப் போக்கி நான் பாவியனேன் - நீர்
தீமையென்று கருதுவதை துணிந்து செய்தேன்

உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகின்றீர்
ஆத்துமத்தில் அந்தரத்தில் அறிவையூட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்
பனி வெண்மைக்கு உயர்வாகப் புனிதமாவேன்

பாவத்தில் ஜென்மித்தேன் நீ அறிவாய்
தோஷத்தில் பெற்றெடுத்தாள் என் தாயே -உம்
தீர்ப்புகளில் குற்றமோ குறையோ இல்லை -நின்
முடிவுகளின் நீதியையும் எதிர்ப்பாரில்லை

வல்லவராம் பிதாவை நாம் வணங்கிடுவோம்
சுதன் இயேசு கிறிஸ்துவுக்கும் தோத்திரமே-நம்
உள்ளத்தில் குடிகொள்ளும் ஆவிக்கும்
என்றென்றும் புகழ் ஒலிக்க ஆமென்.

பாடல்-5

கருணை தெய்வமே கண் பாரும்
எங்கள் பாவங்களை நீர் பொறுத்தருளும் } 2

உடலும் அறிவும் மனமும்
ஒன்று சேர்ந்து உம்மை எதிர்த்ததையா } 2
தேவ கட்டளை வழியை மனம்
பன்முறை அறிந்தும் வெறுத்தையா
பாவச் சேற்றை மனதில் எம்
வாழ்வே கொண்டு நிறைந்ததையா

பாதைத் தெளிவுறத் தெரிந்தும் அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை } 2
உண்மை விளக்கு எரிந்தும்-அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அனைத்தும்-அதை
உணர்ந்த பின்பும் திருந்தவில்லை

அன்பு செய்யும் இறைவா உன்னை
மறந்துச் சென்றதை எண்ணுகிறோம் } 2
நீதி நிறையும் தலைவா எம்
பாவத்தை நினைத்துக் கதறுகிறோம்
தூய வாழ்வின் நிறைவே-உன்
மன்னிப்புத் தருவாய் உயிர் பெறுவோம்

பாடல்-6

இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ
மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால்   } 2
இயேசுவின் அன்பை . . . . .

மறந்திடாதிருக்க நீ சிலுவையிலே அவர்----2
மரித்துத் தொங்கிடும் காட்சி மனதில் நில்லாதோ

அளவில்லா அன்பு அதிசய அன்பு
ஆழம் அகலம் நீளம் எல்லைக் காணா அன்பு
களங்கமில்லா அன்பு கருணை சேர் அன்பு -----2
கல்வாரி மலைதன்னில் கதரிடும் அன்பு

அலைகடலைவிடப் பரந்தப் பேரன்பு
அன்னைமார் அன்பெல்லாம் திரையிடும் அன்பு
மலைபோல் எழுந்தென்னை வளைத்திடும் அன்பு ----2
சிலையென ப்ரம்மையில் நிறுத்திடும் அன்பு

எனக்காக மனுவுறு எடுத்த நல் அன்பு
எனக்காக தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காகப் பாடுகள்ஏற்றப் பேரன்பு ----2
என்க்காக உயிரையே தந்த தேவன்பு

## பாடல்-7


பாடுகள் நீர் பட்டபோது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

கெட்டுப்போனோம் பாவியானோம்
கிருபை செய் நாதனே
மட்டில்லாக் கருணை என்மேல்
வைத்திரங்கும் இயேசுவே

துஷ்ட யூதர் தூணினோடு
தூயக் கைகள் கட்டியே
கஷ்டமாய் அடித்தபோது
பாய்ந்த செந்நீர் எத்துணை---கெட்டுப்போனோம்

சென்னிமேற் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த ரத்தத்தினால்
சர்வ பாவம் நீங்குமே----------கெட்டுப்போனோம்

ஐந்து காயத்தால் வடிந்த
அரிய இரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவந்தீர்க்க
வேண்டுகிறோம் இயேசுவே----கெட்டுப்போனோம்



# பஸ்காவின் மறைபொருள்
# கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும்




**J.P. LAMINATION**

All Types God Pictures, Key Chains & all Printing Works

No. 74, Kasi Garden 1st Street, Kasimedu, Royapuram,
Chennai - 13. D. Selvam, Cell: 9380268365, 9884230487